05.90695
455

# யுத்தத்தின் இழப்புக்கள்

## எதிர்காலத்திற்கான சவால்களும் முன்னுரிமைகளும்

இலங்கை தேசிய சமாதான பேரவை
2003



©இலங்கை தேசிய சமாதான பேரவை
மே மாதம் 2003

அச்சிட்டோர்

SARVODAYA
VISHVA LEKHA
Printers

41, லும்பினி அவினியு
இரத்மலானை, ஸ்ரீ லங்கா


நூலகம் அன்பளிப்பு

# யுத்தத்தின் இழப்புக்கள்

## எதிர்காலத்திற்கான சவால்களும் முன்னுரிமைகளும்

இலங்கை தேசிய சமாதான பேரவை
2003

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
(P)CC



இலங்கை தேசிய சமாதான பேரவையும் மார்கா நிறுவனமும் இணைந்து நடத்திய இலங்கையின் யுத்தத்தின் பொருளாதார சமூக அரசியல் மற்றும் மனித இழப்புக்கள் பற்றிய 2002 ஆம் ஆண்டின் ஆய்வின் பெறுபேறாக இச்சிறுநூல் வெளியிடப்படுகின்றது. இப்பிரசுரம் இவ்வாய்வின் மிக முக்கியமான செய்திகளை மிகவும் இலகுவான முறையிலும் பூரணப்படுத்தப்பட்ட தகவல்களாகவும் சுருக்கமாகவும் வழங்குகிறது. இது சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கிடைக்கும்.

தேசிய சமாதானப் பேரவையானது இப்பிரசுரத்தை பூர்த்தி செய்ய உதவிகள் நல்கிய கலாநிதி.கொட்பிரி குணதிலக்க, மார்கா நிறுவனம், K.W. ஜனரஞ்சன, சைமன் ஸ்டார்லிங், பெத்தான் கொப்லி ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

இப்பிரசுரத்தின் இறுதி வரைவு இலங்கை சமதானப் பேரவையின் பணிப்பாளர்களான ச.பாலகிருஷ்ணன் ஜெகான் பெரேரா ஆகியோரால் நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தேசிய சமாதான பேரவை
12/14, புராண விகார வீதி
கொழும்பு - 06
இலங்கை
தொலைபேசி (94-1) 2818344 , 2854127
தொலைமடல் (94-1) 2819064
மின்னஞ்சல் peace2@sri.lanka.net
இணையத்தளம் www.peace-srilanka.org

305.90695

# உள்ளடக்கம்

## பகுதி - 1
**இவ்யுத்தத்தின் இழப்புகள் யாவை?**

- மனித
- சமூக அரசியல்
- பொருளாதார
- சுற்றுச்சூழல்

## பகுதி - 2
யுத்தத்தின் தொடருகின்ற இழப்புகள் யாவை?

## பகுதி - 3
யுத்தத்தின் மரபுகளை எதிர்நோக்கல்

## பகுதி - 1
## யுத்தத்தின் இழப்புகள் யாவை?

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக நடைபெற்ற இந்நாட்டின் யுத்தத்தின் இழப்புகளுக்கு ஒவ்வொரு சமூகத்திலுமுள்ள நாம் எல்லோருமே பங்களிப்புச் செய்துள்ளோம். உறயினர்களினதும் நண்பர்களினதும் மரணங்கள் மூலமாகவும், காயப்பட்டு ஊனமுற்றமை மூலமாகவும், மேலதிக வரிகளைச் செலுத்தியதன் மூலமாகவும், எமது கருத்துச் சுதந்திரத்தையும் நடமாடுவதற்கான உரிமையையும் கட்டுப்படுத்தியதன் மூலமாகவும், அதிகரித்த பயம் பீதி பாதுகாப்பின்மை மூலமாகவும், பொருளாதார அபிவிருத்திக்காள அவகாசங்களை இழந்ததன் மூலமாகவும் மற்றும் பல்வேறு வகையிலும் நாம் யுத்தத்தின் விளைவுகளுக்குப் பலியாகியுள்ளோம். கடந்த 2002 பெப்ரவரி 22ம் திகதி இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டதனால் இருசாராரும் போர் நிறுத்தத்திற்கு இணங்கியுள்ளனர்.



யுத்தத்தினால் ஏற்பட்ட மனித, சமூக, அரசியல், பொருளாதார, சுற்றுச்சூழல் விரயங்களையும் இப்போர் எதிர்காலப் பரம்பரைக்கு விடுத்துச் சென்றுள்ள மரபுகளையும் இப்புத்தகம் ஆராய்கிறது. யுத்தம் இலங்கை மக்களின் வாழ்க்கைக்கு ஏறபடுத்திய தாக்கம் அவர்களின் வாக்குமூலங்களின் மூலம் கூறப்பட்ட விடயங்களுக்கு அனுகூலமான வகையில் பல்வேறு தகவல்களும் அமைந்துள்ளன. இப்புத்தகத்தை வாசிக்கும் போது நீங்கள் இந்த யுத்தத்தின் செலவுகளுக்கு எவ்வகையான பங்களிப்பை செய்துள்ளீர்கள் என்பதையும் நீங்களும் உங்களது சமூகத்தினரும் தொடர்ந்தும் எவ்வகையான பங்களிப்பை வழங்கி வருகின்றீர்கள் என்பதையும் சற்று சிந்தியுங்கள்.

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் 1983 முதல் போர் நிறுத்தம் ஏற்பட்ட 2002 ம் ஆண்டு வரை நடைபெற்ற உள்ளூர் யுத்தத்தின் எல்லா இழப்புகளையும் இப்புத்தகம் விளக்குகின்றது.

# 1. யுத்தத்தின் மனித இழப்புக்கள்

**மரணம் காயமடைதல் காணாமற் போதல்**

மரணமடைந்தவர்கள், காயமடைந்தவர்கள், பலாத்காரமாக கடத்தப்பட்டு காணாமற்போனவர்கள் போன்றோர் இந்த யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவராவர். **சுமார் 65 000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் அரைவாசிப்பேர் சாதாரண மக்கள் ஆவர். பெரும் பாலானவர்கள் 20 க்கும் - 30 க்கும் இடைப்பட்ட வயதினர்.**

இவ்யுத்தத்தில் கொல்லப்பட்டவர்களில் சராசரிவயது 30 வருடங்களானால் இல்லாதொழிக்கப்பட்ட முழுமையான வாழ்வு 18 இலட்சம் வருடங்களாகும்.

> எனது மகனின் மரணம் தொடர்பாக கடிதம் மூலம் தகவல் கிடைத்தது. அவரின் இறுதிக் கிரியைகளில் கூட கலந்து கொள்ள முடியவில்லை. அவர் புதைக்கப்பட்டு 05 நாட்களின் பின் தான் எனக்கு தகவல் கிடைத்தது. அவர் ஒரு அநாதையைப் போல புதைக்கப்பட்டிருப்பார் என நினைக்கும் போது எனகசு நெஞ்சைப்பிழக்கும் வேதனையாக இருக்கிறது. எனது மகள்மார் அவரின் ஒரே சகோதரனை இழந்துவிட்டனர்.
>
> தமிழ் இராணுவ உறுப்பினரின் தாய்

உறவினர்களையும் நண்பர்களையும் இழந்தவர்கள் தமது வாழ்நாள் முழுவதும் இவ்விழப்புக்களின் சோகத்தை உணருவார்கள். குடும்பத்தலைவரை இழந்த குடும்பத்திற்கு ஏற்படும் பொருளாதார சுமை அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களை அதிகரிக்கும் வகையில் அமைந்துள்ளது.

> எமது ஆலய உற்சவம் நடைபெற்றது. எமது உறவினரின் பிள்ளைகள் அவர்களுடைய தந்தையாருடன் செல்வதைப் பார்த்த எனது பிள்ளைகள் “எமது தந்தை இருந்திருந்தால் நாமும் இவ்வாறு தானே சென்றிருப்போம்” என்று கூறினார்கள்
>
> யாழ் விதவைப் பெண்

இந்த யுத்தத்தில் 17,648 விடுதலைப் புலிகளின் போராளிகளும் 14,790 அரசபடையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

விதவைகளினதும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களினதும் எண்ணிக்கை வியக்கத்தக்களவில் அதிகரித்துள்ளது. விதவைகள் சமூகப் புறக்கணிப்பிற்கும் வறுமைக்கும் துன்புறுத்தல்களுக்கும் ஆளாக வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் மட்டும் 18,000 பேர் விதவைகளாயியுள்ளதோடு சுமார் 400,000 பெண்கள் தமது வதிவிடங்களை இழந்து வாழ்கின்றனர்.

> *எனது கணவனுக்கு நேர்ந்த கதிக்கு அவரது குடும்பத்தினர் என்மீது பழி சுமத்துகின்றனர். சமூகம் ஓரக் கண்ணால் எம்மைப் பார்க்கின்றது. நான் பெண் என்ற படியால் என் மீது தவறு இருப்பதாகவே எப்போதும் அவர்கள் கருதுகின்றனர்.*

மத்திய வங்கி குண்டுத் தாக்குதலில் கணவனை இழந்த இளம் விதவை

3687 அரச இராணுவத்தினர் இராணுவ நடவடிக்கையின் போது காணாமற்போயுள்ளனர். காணாமற் போன படையினரின் உறவினர்கள் அவர்கள் காணாமற் போய் வல வருடங்களின் பின்பும் இன்னும் உயிருடன் வாழ்கிறார்கள் என்னும் நம்பிக்கையுடன் இருக்கின்றார்கள்.

> *எனது மகன்மார் அரச இராணுவத்தில் இருக்கின்றார்கள். 1998 ஆம் ஆண்டு எமது பிள்ளைகளில் 650 பேரின் இறந்த உடல்கள் கிடத்தப்பட்டிருந்தன. அவை பிளாஸ்ரிக் பைகளினுள் போடப்பட்டிருநதன. ஆனால் எனது மகனும் அவைகளில் ஒருவரா என்பது எனக்குத் தெரியாது. அப்பிரேதங்களை நாங்கள் பார்க்கவில்லை. எனது பிள்ளை எனது வாழ்வின் ஒரு பகுதி. எனினும் அவர் உயிருடன் இருக்கின்றாரா அல்லது இறந்து விட்டாரா என்பதைத் தெரிந்து கொள்ளும் உரிமை கூட எனக்கில்லை.*

கண்டியிலுள்ள் மகனை இழந்த தாய் - 1998.

இந்த யுத்தத்தில் அங்கவீனமானவர்களின் எண்ணிக்கை எமகுத் தெரியாது. 10,343 அரச படையினர் நிரந்தரமாக அங்கவீனமுற்றிருக்கின்றனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கின்றது. அங்கவீனமானவர்கள் அடிக்கடி பாகுபாடுகள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் மற்றும் அவர்களின் அர்ப்பணிப்பிற்கான அங்கீகாரமின்மை போன்ற நிலைமைகளினால் துன்புறுகின்றனர்.

> *எனது கண்பார்வையை நான் இழப்பதற்கு முன்பு முழுநாளும் வேலை செய்யக் கூடியதாகவிருந்தது. பல நம்பிக்கைகளுடன் வாழக்கூடியதாக விருந்தது. ஆனால் எப்போதாவதொரு நாள் எனது கண்கள் ஒளி பெறும் என்ற அற்ப நம்பிக்கையுடன் வாழ வேண்டிய நிலையில் இப்போது இருக்கின்றேன். எனது முழுவாழ்விலும் சிறையிலடைக்கப்பட்டவனைப் போல தான் எனது நினைவுகள் இருக்கின்றன.*

மத்திய வங்கிக் குண்டுத்தாக்குதலில் கண்பார்வையை இழந்த இளைஞர்.

பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகக் குற்றங்களுக்கு சகல தரப்பினரும் ஆளாகியிருக்கின்றன. இவைகளில் பெண்கள் சிறுவர்கள் உட்பட பொது மக்கள் படு கொலை செய்யப்பட்டமை, பாகுபாடற்ற குண்டுத்தாக்குதல்கள், பாலியல் வல்லுறவு சித்திரவதை போன்ற சம்பவங்களின் மூலம் பாரிய மனித உரிமை மீறல்களுக்கும் வன்முறைச் சம்பவங்களுக்கும் சகல தரப்பினரும் உள்ளாகியுள்ளனர். சர்வதேச மனிதாபிமான சட்டங்களுக்கு முரண்பாடாக இரு தரப்பினருமே போரின் போது காயமடைந்த அல்லது கைது செய்யப்பட்டவர்களை கொன்றிருக்கின்றனர். படையினர் போராளிகள், போதுமக்கள் போன்றோரில் தப்பியுள்ள ஆயிரக்கணகானோர் இத்தகைய மிலேச்சத்தன செயற்பாடுகளைக் கண்டு மனநிலை பாதிக்கப்பட்டு தொடர்ந்தும் மனவிரக்தியடைந்துள்ளனர்.

> *இப்போரானது எமது வாழ்நிலையை பெரிதும் மாற்றியுள்ளது. எமக்கு நாளையைப் பற்றி சிந்திக்க முடியாது. நாங்கள் எமது வயல் வெளிக்குச் சென்று நிலத்தைப் பண்படுத்த முயன்றால் எமது கிராமத்திற்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தான் எமது சிந்தனையில் தெரிகின்றன. வேலை செய்யக் கூடிய மனநிலை எமக்கில்லை. கிராமம் எங்கும் பயம் தான் தாண்டவமாடுகின்றது.*
>
> யக்காவெவ கிராமவாசி - 1998

பயமும் பாதுகாப்பின்மையும் நாடுமுழுவதும் அதிகரித்திருந்தது. வன்செயல்களும் பயங்கரவாதமும் பரவலாகவும் எதிர்பாராத விதமாகவும் பரவியிருந்தன. பல அரசியல் தலைவர்கள் கட்சி அங்கத்தவர்கள் பொது மக்கள் கொல்லப்பட்டனர். சுமார் 130 000 இராணுவப்படையினரின் குடும்பத்தினர் அவர்களது உறவினர்கள் கொல்லப்படலாம் என தொடர்ச்சியான பயத்துடன் வாழ்ந்தனர்.

> *கிராமத்திற்கு வருகை தருபவர் தொடர்பாக நாம் அவதானத்துடனும் சந்தேகத்துடனும் இருக்கின்றோம். இக்கிராமம் தாக்கப்பட்டதன் பின் தான் இங்கு பாதுகாப்பிற்காக துப்பாக்கிகள் வழங்கப்பட்டன. அதன் பின் கிராமத்திற்கான அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. ஏனெனில் விடுதலைப்புலிகள் இந்தத் துப்பாக்கிளை கைப்பற்ற வரலாம். இங்கு வாழும் ஒவ்வொரு வரும் யுத்த நிலைமைக்கு பழகிவிட்டார்கள்.*
>
> அனுராதபுர கிராமவாசி - 1998

இந்த உள்ளுர் ஆயுத முரண்பாடானது மனித விழுமியங்களையும் சமூக அடித்தளத்தையும் சீரழித்துள்ளதோடு வன்முறைக் கலாசாரத்தையும் உருவாக்கியுள்ளது. உலகின் பல பாகங்களிலும் காணப்பட்ட அரசுக்கும் தீவிரவாத இயக்கங்களுக்குமிடையிலான முரண்பாடுகள் மிகவும் மிலேச்சத்தனமான வன்முறைத் தன்மைகளைக் கொண்டவையாகவே காணப்படுகின்றன. முரண்பாட்டுச் சூழலுக்குள் வாழும் மக்கள் தொடருகின்ற வன்முறைகளுக்கும் கொடூர வேதனைகளுக்கும் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்வதோடு மனிதாபிமானம் கிரமமாக சீரழிகின்ற நிலைமைகளும் ஏற்படுகின்றது. சட்டரீதியிலும் சட்ட வீரோதமாகவும் ஆயுதங்களைப் பெற்றுக் கொள்வது சுலபமாகின்ற நிலையில் வன்முறையானது பல்வேறு அரசியல் சமூக நிறுவனங்களை ஆக்கிரமிக்கின்ற பொழுது ஜனநாயக நடைமுறைகள் வலுவழக்கின்றமையைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

சிறுவர்கள் இந்த யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாகவர்

பலர் கொல்லப்பட்டோ காயமடைந்தோ அல்லது வன்செயல்களினால் மனநிலை பாதிக்கப்பட்டோ உள்ளனர். இவ்விதம் பாதிக்கப்பட்டவர்களில் 250,000 க்கு மேற்பட்டவர்கள் 14 வயதிற்குக் குறைந்தவராவர். நூற்றுக்கணக்கான சிறுவர்களும் சிறுமிகளும் போராளிகளாக சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். கல்வி பாதிப்புற்றுள்ளது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாடசாலைளை விட்டு விலகும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு இது நாட்டின் மிகவும் உயர்ந்த விகிதாசாரமாக உள்ளது. தமது பெற்றோரில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ பல சிறுவர்கள் இழந்துள்ளதோடு இவர்கள் பாதுகாப்பான ஆதரவையும் அவதானத்தையும் இழந்துள்ளனர்.

உதாரணமாக வட மாகாணத்திலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவர் பாக்கியராஜா. அவருக்கு 10 வயதாயிக்கும் போது இந்திய அமைதிப் படையினால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளையும் பாலியல் வல்லுறவுகளையும் பார்த்துள்ளார். அவரது 15 ஆவது வயதில் அரசபடைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற சண்டைகளுக்கிடையில் சிக்குண்டு மரணமாகியுள்ளார்.

*இப்போது சிறுவர்களின் விளையாட்டு எல்லாம் யுத்தம் தொடர்பானவையாகவே இருக்கின்றன. இராணுவச் சுற்றி வளைப்பு பாதுகாப்பு அரண்கள் கவச வாகனங்கள் போன்றவை தான் அவர்களின் விளையாட்டுக்களை ஆக்கிரமித்துள்ளன. எனது கிராமத்தில் 7 வயது சிறுவர்களுக்கு T 56 ரக துப்பாக்கியை கழற்றி மீண்டும் பொருத்தக் கூடிய தகுதி இருக்கின்றது.*

யக்காவெவ கிராமவாசி



### நிலக்கண்ணி வெடிகள்

போரின் எல்லாத்தரப்பினராலும் சுமார் 700 000 நிலக்கண்ணிகள் புதைக்கப்பட்டுள்ளன. நிலக்கண்ணி வெடிகள் ஆயிரக்கணக்கானவர்களைக் கொன்றுள்ளதுடன் காயப்படுத்தியுமிருக்கின்றது. அவை எவ்விதப் பாகுபாடுமில்லாமல் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியவை என்பதோடு பல வருடங்கள் நிலத்தினுள் நிலைத்திருக்கக் கூடியவையுமாகும். இந்நிலக்கண்ணிவெடிகள் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களிலும் விவசாயம் செய்யக்கூடிய பிரதேசங்களிலுமே பெரும்பாலும் புதைக்கப்பட்டுள்ளன.





**புலம் பெயர்ந்தமையும் வீடுகளின்மையும்**

2001 ஆம் ஆண்டின் கணிப்பீட்டின்படி தமிழ் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகங்களைச்சார்ந்த சுமார் 1,116,000 பேர் தமது சொந்த வதிவிடங்களை இழந்துள்ளனர். சுமார் 800,000 பேர் தாம் வாழ்ந்த பிரதேசங்களை விட்டு வெளிமாவட்டங்களில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளனர். இவர்கள் தமது பாதுகாப்பையும் குடும்பசூழலையும் இயல்பு வாழ்க்கையையும் தமது வழமையான வாழ்வுச் சூழலையும் இழந்துள்ளனர். பலர் இலங்கையை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் அகதிகளாக அரசியல் தஞ்சமடைந்துள்ளனர்.

இலங்கையில் ஊவா மாகண சனத்தொகைக்கு சமமானவர்கள் தமது வதிவிடங்களை இழந்துள்ளனர்.

> உணவு உண்பது நித்திரை கொள்வது அன்றாட வீட்டு வேலைகளை மேற்கொள்வது எல்லாம் ஒரே இடத்தில் தான் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எமக்கு அமர்ந்து ஓய்வெடுக்க வசதியில்லை. ஒரு பாய்த்துண்டில்தான் நித்திரை கொள்ள வேண்டியுள்ளது. இந்த கஷ்டங்களைப் பார்க்கும் போது தற்கொலை செய்து கொள்ள நினைக்கின்றது. அந்தளவுக்கு துன்பங்களை நாம் அனுபவிக்கின்றோம்.
>
> ஸக்ஸ்மன் அந்தனி - நாயாரிலிருந்த மீனவர்.

தமது இயல்பான வதிவிடங்களை இழத்தலும், புலம் பெயர்தலும் பாரிய மன அதிர்ச்சியை ஏற்படுத்தும் விடயமாகும். புலம் பெயர்தல் என்பது திடீரென நடைபெறும் சம்பவமாகும். இதன் மூலம் வாழ்நாள் முழுவதும் உருவாக்கிய சமூக பொருளாதார உறவுகள் ஒரு நாளிலோ அல்லது ஒரு இரவிலோ சீரழிக்கப்படுகின்றது. சுமார் 40,000 குடும்பங்கள் அகதி முகாம்களில் வாழ்கின்றனர். அம் முகாம்களில் நீண்ட காலம் வாழும் குழந்தைகள் சாதாரண இயல்பு வாழ்க்கை என்ன என்பதை உணரமுடியாதவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். சில குடும்பங்கள் ஒரு முகாமிலிருந்து இன்னொரு முகாம் என பல்வேறு முகாம்களுக்கு பலவந்தமாக இடம்மாற்றப்படுகின்றனர்.

> *நாங்கள் வாழ்ந்த வீடு மண் சுவர்களையும் ஓலைக் கூரையையும் கொண்டிருந்தாலும் நீர், சுகாதாரம், சுதந்திரமாக நடமாடுவதற்கான இடம் போன்ற எல்லா அடிப்படை வசதிகளும் இருந்தன. ஆனால் நாங்கள் இப்போது ஒரு கூட்டுக்குள் அடைப்பட்டவர்களாகவே வாழ்கின்றோம். எமது முகாம் முன்பு கோழி வளர்பிற்குப் பயன்படுத்தப்பட்ட கட்டிடம் என கூறப்படுகின்றது. இந்நிலையில் பிள்ளைகள் படிப்பது எப்படி? தண்ணீருக்காகவும் மலசலக்கூடத்திற்காகவும் நாம் அடிக்கடி வரிசையில் நிற்க வேண்டியுள்ளது. வெளியில் செல்வதற்கு நான்கு மணிநேர அனுமதிமட்டும் தான் வழங்கப்படுகின்றது. இந்த முகாம் அதிகாரிகள் மிகவும் கடினமானவர்கள். வெளியில் சென்று நேரம் தாமதித்து வருபவர்கள் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர்.*
>
> புலம் பெயர்ந்த ஒரு தமிழ்த்தாய் - 1998

புதிய சமூக சூழலுக்கு நகருதல் என்பது மிகவும் சிரமமானதும் வேதனை மிக்கதுமான செயலாகும். விசேடமாக தொழில் வாய்ப்புகளும், வளங்களும் குறைவாகக்காணப்படும் பிரதேசங்களுக்கு புலம் பெயர்ந்தால் அங்கு உள்ளுர் மக்களுடன் முரண்பாடுகளையும் எதிர்ப்புகளையும் எதிர்நோக்க நேரிடும்.

**எல்லைக் கிராமங்களில் வாழ்க்கை**

வடக்கு கிழக்கு மாகாண எல்லைகளில் வாழும் கிராமிய சமூகங்கள் பயம் பாதுகாப்பின்மை வறுமை போன்றவற்றின் காரணமாக துன்பப்படுகின்றனர். மிகவும் நெருங்கிய சமூக மற்றும் பொருளாதார உறவுகளைத் தொடர்ச்சியாகக் கொண்டிருந்த தமிழ் சிங்கள சமூகங்கள் வாழ்ந்த இப்பிரதேசங்களில் வாழ்வது மிகவும் கடினமானதாகியுள்ளது.

> *தமிழ் கிராமம் எமது குடியிருப்பை அன்மித்துத்தான் இருந்தது. தமிழ்க் கிராமத்தவர் எம்மிடம் மீனை வாங்குவார்கள். எமக்கு காய்கறி, பால், எல்லினால் செய்யப்பட்ட இனிப்புப் பண்டங்களை கொண்டு வருவார்கள். ஒரே குடும்பத்தவர்களைப்போல மிகவும் ஒற்றுமையாக நாம் வாழ்ந்தோம். இன்றைய இந்த நிலைமை ஏன் எமக்கு ஏற்பட்டது. என்பதை எம்மால் புரிந்துகொள்ள முடியாது. நிலைமைகள் விரைவாக மாறிவிட்டன.*
>
> யக்காவெவ கிராமவாசி



எவ்வாறு இந்த யுத்தம் எல்லா மக்களையும் பல்வேறு விதத்தில் பாதித்துள்ளது என்பதை சிந்தியுங்கள். முரண்பாட்டின்போது ஆணும் பெண்ணும் மாறுமட்ட பங்கை வகிப்பதோடு அவர்களின் தேவைகளும் அவதானங்களும் மாறுபட்டதாக அமையும். பெண்கள் பாலியல் வல்லுறவிற்குப் பலியாகக்கூடிய அபாயத்துடன் வாழ்வதோடு அவர்களின் குடும்பத்தைப் பராமரிக்கும் பாரிய சுமையையும் சுமக்கின்றனர்.

பெண்கள் வெறுமனே யுத்தத்திற்குப் பலியாபவர்கள் மட்டுமல்ல. அவர்கள் போராளிகளாக ஆசிரியைகளாக விவசாயிகளாக சமாதான ஆர்வளர்களாக பல பங்குகளை வகிக்கின்றார்கள்.

# மனித இழப்புக்களின் சாரம்சம்

சுமார் 65 000 பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் சாதாரண பொதுமக்களாவர்.

ஆயிரக்கணக்கானவர்கள் நிரந்தர அங்கவீனர்களாகியுள்ளனர்.

சுமார் 12 இலட்சம் பேர் இருப்பிடங்களை இழந்து புலம் பெயர்ந்தவர்களாகவும் அகதிகளாகவும் வாழ்கின்றார்கள்.
66 000 பேர் இந்தியாவில் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.
40 000 பேர் இந்தியாவில் அகதி முகாம்களுக்கு வெளியில் வாழ்கின்றனர்.
200 000 பேர் மேலைத்தேய நாடுகளில் வாழ்கின்றனர்.
800 000 பேர் இலங்கையில் அகதிகளாக வாழ்கின்றனர்.

யுத்தத்தின் விளைவாக ஏற்பட்ட மன அதிர்ச்சியின் காரணமாகவோ அல்லது மனநிலை பாதிக்கப்பட்டதன் காரணமாகவோ ஆயிரக்கணக்கானவர்கள் பாதிப்பிற்குள்ளாகி துன்புறுகின்றனர். இராணுவ புனர்வாழ்வு நிலையங்களில் சுமார் 9 000 மேற்பட்ட இராணுவத்தினர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சுமார் 30,000க்கும் 40,000க்கும் இடைப்பட்ட இராணுவத்தினர் இராணுவத்கைவிட்டு தப்பியோடியுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் அநேகமானவர்கள் தம்மிடமிருந்த ஆயுதங்களையும் அவர்களுடன் எடுத்துக் கொண்டு சென்றுள்ளனர். இவர்களுக்கு இராணுவத் தொழிலைவிட வேறு எவ்விதத் தொழிற்திறமைகளும் இல்லாததால் பாரிய தொழிலில்லா பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

உலகில் கூடுதலானோர் தற்கொலைபுரியும் நாடாக இலங்கை விளங்குகின்றது. மொத்த சனத்தொகையில் நான்கிலொரு பகுதியினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். யுத்தமானது இந்த இருபிரச்சினைகளுக்குமான பிரதான காரணியாக அமைந்துள்ளது.

## சமூக அரசியல் இழப்புக்கள்

எனக்கு 11 வயதாயிருக்கும் போது எனது தந்தையார் கைது செய்யப்பட்டார். நாம் அவரைப் பார்க்க சென்றபோது விசாரணை முடிந்தபிறகு அவர் விடுதலை செய்யப்படுவார் என கூறப்பட்டது. ஆனால் அவரை ஒரு சாக்கினுள் போட்டுக்கட்டி மண்ணெண்ணெயை ஊற்றி தீ மூட்டி எரித்துவிட்டார்கள் என்பதை பின்பு தான் தெரிந்து கொண்டோம்.

மட்டக்களப்பைச் சார்ந்த ஒரு பெண் - 1998



இந்த யுத்தமானது எமது சமூகத்தின் ஜனநாயக அடித்தளத்தை சீரழித்து விட்டதோடு வன்முறை மற்றும் குற்றச் செயல்களுக்கு அச்சமற்ற கலாசாரத்தை தோற்றுவித்துள்ளது. இப்போரின் தன்மையானது அரசியலின் வெளிப்பாட்டு அல்லது பகிரங்கத் தன்மையையும் பொறுப்பேற்றலையும் இல்லாதொழித்துள்ளதோடு நாட்டில் ஊழல்களுக்கான வாய்ப்புக்களையும் அதிகரித்துள்ளது. மனித உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு மீறப்படுகின்றன.

**மனித உரிமை மீறல்களும் மட்டுப்படுத்தப்படலும்**


இந்த யுத்தத்தின் காரணமாக இலங்கைப்பிரசைகளின் மனித உரிமைகள் பாரியளவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு மீறப்பட்டும் உள்ளன. இதில் குறிப்பாக தமிழ் சமூகம் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளதோடு வடக்கு கிழக்குப் பிராந்தியத்தில் வாழும் மக்களின் ஜனநாயக உரிமைகள் முழுமையாக இழந்துள்ளனர். இலங்கையின் பல பிரதேசங்கள் 1984 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியான அவசரகால ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்தன. அரசாங்கமும் பாதுகாப்புப் படையினரும் அவர்களின் அதிகரிக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களின் பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் மட்டுப்படுத்தியுள்ளனர். அவ்விதசெயற்பாட்டில் பின்வருபவையும் அடங்கும்.

**கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம்** இது எதிர்ப்புக்கள், ஆர்ப்பாட்டங்கள் போன்ற ஜனநாயக உரிமைகளையும் உள்ளடக்கும்.

**தகவல்களை வெளியிடுவதற்கான சுதந்திரம்** இலங்கையின் அரசயாப்பு பேச்சு சுதந்திரத்தையும் கருத்துக்ளை வெளிப்படுத்துவதற்கான சுரந்திரத்தையும் அடிப்படை உரிமைகளாக ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் யுத்தம் நடைபெறும் பிரதேசங்களுக்கு ஊடகத்துறையினர் செல்வது தடைசெய்யப்பட்டது. 1988 ம் ஆண்டிலிருந்து பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பான செய்திகள் வெளியிடுவதில் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கும் கூட நேரடி தணிக்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. அச்சகங்களை மூடிவிடவும் பத்திரிகை நிறுவனங்கள் ஒலிபரப்பு நிலையங்கள் போன்றவற்றை மூடிவிடவுமான தமது அதிகாரத்தை அரசாங்கம் அதிகரித்துக் கொண்டுள்ளது.

இலங்கையில் தயாரிக்கப்படும் எல்லாசெய்திகளையும் தணிக்கை செய்வதற்கு ஒரு விசேட ஊடக தவவல் நிலையம் ஏற்படுத்தப்பட்டது. தமிழீழ விடுதலைப்புலிகளும் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியதோடு ஊடகத்துறையினரின் நடமாட்டங்களையும் கட்டுப்படுத்தினர். போர் புரியும் தரப்பினருக்கெதிரான அபிப்பிராயங்களை தெரிவித்த ஊடகவியலாளர்கள் சிலர் கொலைசெய்யப்பட்டனர் அல்லது கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டனர். சிலர் காணாமற் போயுள்ளனர். இத்தகைய நிலைமைகளுக்குள்ளானவர்கள் தொடர்பான தகவல்களை அவர்களின் உறவினர்களுக்கு தெரிவிப்பதை இருசாராரும் தவிர்த்துக் கொண்டனர்.

**நடமாடுவதற்கான சுதந்திரம்** அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் ஆகிய இருசாரரும் பொதுமக்கள் மீது கடும் கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர். நாட்டின் பல பாகங்களுக்கு பொது மக்கள் சுதந்திரமாக செல்வது தடைசெய்யப்பட்டிருந்தது. சில பிரதேசங்களுக்கு செல்ல விசேட அனுமதிப்பத்திரம் பெற வேண்டியிருந்தது. யுத்த காலத்தில் வட கிழக்கில் வாழும் மக்கள் ஏனைய பிரதேசங்களுக்கு செல்வதற்கு விசேட அனுமதி பெறவேண்டிய நிலையில் அவர்கள் வெளிப்பிரதேசங்களுக்குப் பயணம் செய்வது தடுக்கப்பட்டு ஓரே பிரதேசத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டார்கள்.




## அவசரகால விதிமுறைகள்

அவசரகால விதிமுறைகளின் கீழும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழும் எவரையும் கைது செய்வதற்கும் 18 மாதங்கள் வரை எவ்வித நீதிமன்ற விசாரணைகளுமின்றி தடுத்து வைப்பதற்கும் உறவினர்கள் அவர்களைப் பார்வையிடுவதை கட்டுப்படுத்துவதற்கும் அவர்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள இடம் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பான தகவல்களை வழங்காமலிருப்பதற்குமான அதிகாரங்கள் பொலீசாருக்கும் இராணுவத்தினருக்கும் வழங்கப்பட்டிருந்தது. இந்த விதிமுறைகளானது சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையிலும் சர்வதேச சட்டங்களில் அங்கீகரிக்கப்பட்ட அதிகார வரையறைகளையும் மீறுவதாக அமைந்திருந்தது. 2000 ம் ஆண்டில் மட்டும் மேற்கூறிய விதிமுறைகளின் கீழ் 18,000 பேர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதாக கணிக்கப்படுகின்றது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவேண்டிய அதிகாரிகள் மத்தியில் அதிகாரங்களை துஷ்பிரயோகம் பண்ணக்கூடிய வகையிலான குற்றங்களை அங்கீகரிக்கும் (impunity) கலாசாரமானது ஒருதலைப்பட்சமான கைதுகளுக்கும், பொதுமக்களைக் கொல்வதற்கும், தடுப்புக்காவலில் உள்ளவர்களைப் பரந்தளவில் சித்திரவதை செய்வதற்கும், பாலியல் வல்லுறவுகளை மேற்கொள்வதற்கும் தடுப்புக்காவலில் உள்ளவர்கள் இறப்பதற்கும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மீறிநடப்பதற்கும் எவ்வித நீதிமன்ற விசாரணைகளுமின்றி காலவரையறையற்ற தடுப்புக்காவலுக்கும் வழிவகுத்தது.



**இராணுவ விவகாரம்
தொடர்பான எல்லா
தகவல்களும்
விமர்சனங்களும்
தணிக்கைக்கு
உட்படுத்தப்படல் வேண்டும்.**





இந்த செய்தியைப் பாருங்கள் யுத்தம் தொடர்பான எல்லா தகவல்களும் தணிக்கைக்குட்படுத்தப்படல்வேண்டும் எமது சொந்த நாட்டின் நிலைமைகளைத் தெரிந்து கொள்வது எமக்கு மறுக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அவசரகால விதிமுறைகள் தென்னாபிரிக்காவின் நிறவெறியாட்சிக்கால சட்டங்களை விட மிக மோசமானது என நான் கேள்விப்பட்டுள்ளேன்.

*எமது சொந்த நாட்டிலேயே எமக்குத் தேவையான இடங்களுக்கு செல்ல முடியாது. வவுனியாவிலுள்ள எனது குடும்பத்தைப் பார்க்கச் செல்வதற்குக் கூட நான் பிரவேச அனுமதியைப் பெறவேண்டும். அவர்கள் இங்கு வந்து என்னைப் பார்ப்பது அதைவிட சிரமமான காரியம். நாம் செல்ல வேண்டுமானால் பொறுப்பேற்கக்கூடிய ஒருவரை பிணையாக வைத்துவிட்டு பொலீசாரின் அனுமதியையும் பெறவேண்டும்.*

*எனது நண்பன் வண்ணியில் வாழ்கின்றான். அவர் அங்கிருந்து எங்காவது போக வேண்டுமானால் அவர் திரும்பி வருவதை உத்தரவாதப்படுத்தினால் தான் அனுமதி கிடைக்கும். அவ்வாறு அவர் திரும்பிச் செல்லாவிட்டால் அவரது குடும்ப உறுப்பினர் தண்டனையை அனுபவிக்க நேரிடும் என அவர் கூறுகின்றார்.*

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு இளம் மனிதர் - 1998

பொருளாதாரம்

## யுத்தத்தின் பொருளாதார இழப்புக்கள்

யுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார இழப்புக்கள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கும்.

- அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் நேரடியாக யுத்தத்திற்கு செய்த செலவு
- பொது பாதுகாப்பிற்காக அரசாங்கம் செய்த மொத்தசெலவு
- புலம் பெயர்ந்த அகதிகளைப் பராமரிப்பதற்காக அரசாங்கம் செய்த செலவு
- அடித்தள கட்டமைப்புகள் கட்டிடங்கள் போன்றவற்றிற்கு ஏற்பட்ட சேதங்களும் அவற்றை புனர்நிர்மானம் செய்வதற்கான செலவும்
- உற்பத்தி பாதிப்பினால் ஏற்பட்ட நட்டம்
- பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தி தொடர்பாக இழந்த அவகாசங்களினால் ஏற்பட்ட நட்டம்

**இவ்வகையில் கணிப்பிடப்பட்ட மொத்த பொருளாதார இழப்பு ரூ. 24,510,000 கோடிகளாகும்**

அரசாங்கம் வேறு எந்த தேவைகளையும் விட யுத்தத்திற்கே அதிகளவில் செலவு செய்துள்ளது. சுகாதார செலவுகளைவிட மூன்று மடங்கும், கல்விக்கான செலவுகளை விட ஐந்து மடங்கும் வருடாந்தம் யுத்தத்திற்காக செலவழிக்கப்படுகின்றது. அரசு புதிய ஆயுதங்களை வாங்க செலவு செய்கின்றது. மீண்டும் அவ்வாயுதங்களினால் ஏற்படுத்தப்படும் சேதங்களை திருத்தியமைக்க செலவு செய்கின்றது.

இராணுவ நடவடிக்கைகள் அதிகரித்தமையினால் 1998 க்கும் 2001 க்கும் இடைப்பட்ட காலத்தில் மொத்த செலவுகளில் 28 % மாகும்.
யுத்தசெலவுகள் மொத்த பொருளாதார இழப்புக்களில் மூன்றில் இரண்டு பங்கு வட கிழக்கில் வாழும் மக்களுடையதாகும்.

மனித இழப்புக்களிலும் பொருளாதார இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இறப்பு காயமடைதல் மூலம் இழக்கப்படும் பொருளாதார உற்பத்திகள், புலம் பெயர்வதினால் வருமானம் பாதிக்கப்படல் காயமடைந்தவர்களுக்கான வைத்திய செலவுகள் என இவைகணிக்கப்படுகின்றது.

யுத்தத்தினால் அரசாங்கத்தின் செலவுகளையும் வருவாய் மற்றும் முதலீட்டு இழப்பினால் ஏற்படும் பொருளாதார இழப்புகளைப் பார்ப்போம்.

**அரசாங்க செலவுகளும் வருமான மற்றும் உற்பத்தி இழப்புகளும்**


| | | |
|---|---|---|
| பாதுகாப்பிற்கான நேரடி செலவு | ரூ. 372.78 | கோடி |
| சட்டம் ஒழுங்கு மற்றும் பாதுகாப்பிற்கான மேலதிக செலவு | ரூ. 63.12 | கோடி |
| அகதிகள் புலம் பெயர்ந்தோரின் தேவைகளுக்கு செலவு | ரூ. 53 | கோடி |
| பௌதீக சொத்துக்கள் உடைமைகளுக்கான சேதம் | ரூ. 230.9 | கோடி |
| உல்லாசப்பயணத்துறை வெளிநாட்டு முதலீடு இழப்புக்கள் | ரூ. 366 | கோடி |
| வட கிழக்கில் உற்பத்தி இழப்புக்கள் | ரூ. 413 | கோடி |
| தொழில் சார் நிபுணர்களின் வெளியேற்றத்தினால் ஏற்பட்ட நட்டம் | ரூ. 191.37 | கோடி |

அரசாங்கம் யுத்தத்திற்கு செய்யும் மொத்த செலவுகளில் குறைந்தளவு 20 சதவீதமாவது தமிழீழ விடுதலைப்புலிகள் செலவு செய்யும் என நம்பப்படுகின்றது. இது 2001ம் ஆண்டின் விலை மதிப்பீட்டின் படி ரூ. 74550 கோடி.

எனவே அரசினதும் தமிழீழ விடுதலைப்புலிகளினதும் நேரடி யுத்தச் செலவுகளை ஒன்றுசேர்த்தால் அது ரூ.510,450 கோடி.

பொருளாதாரம்

## பாதுகாப்பு மற்றும் சமூக அபிவிருத்திக்கான செலவுகளின் விகிதாசாரம்




**கடந்த பத்து வருடங்களின் செலவு வரைபடம்**

| | 1991 | 92 | '93 | '94 | '95 | '96 | '97 | '98 | '99 | 2000 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| - பாதுகாப்பு | 11.2 | 12.0 | 10.9 | 12.9 | 14.3 | 17.7 | 16.8 | 16.9 | 16.4 | 17.7 |
| - சமூக அபிவிருத்தி | 11.2 | 13.0 | 9.9 | 12.8 | 12.7 | 13.5 | 1 2.6 | 12.0 | 12.7 | 9.8 |
| - கல்வி | 3.5 | 5.4 | 4.3 | 4.5 | 3.5 | 4.2 | 4.2 | 4.7 | 5.0 | 3.8 |
| - சுகாதாரம் | 2.4 | 3.1 | 1.9 | 2.6 | 5.2 | 5.0 | 4.7 | 4.0 | 4.8 | 3.9 |
| - வறுமை ஒழிப்பு | 5.3 | 4.5 | 3.7 | 5.7 | 2.0 | 3.2 | 3.0 | 2.5 | 2.6 | 2.0 |
| - புனர்வாழ்வு | 2.0 | 1.1 | 0.69 | 0.80 | 0.27 | 0.14 | | | | |

*மூலம்: இலங்கை மத்திய வங்கியின் வருடாந்த அறிக்கை மூலம் முத்துக்கிருஷ்ணா சர்வானந்தா.*

யுத்தமானது பொருளாதார ரீதியில் ஏற்படுத்திய பாதிப்பு மிகவும் சிக்கலானதாகும்

யுத்தத்தின் நேரடி செலவுகளுக்காக அரசு அதிகளவில் செலவு செய்தமையினால் உற்பத்தித்துறைக்கான வளங்களை வெகுவாகக் குறைத்துள்ளது.

யுத்த ஆயுதங்களின் கொள்வனவிற்கான பாரிய செலவுகள் நாட்டின் வெளிநாட்டு செலவாணி சேமிப்பை வெகுவாகக் குறைத்துள்ளது.

வெளிநாட்டு முதலீடும் உல்லாசப் பிரயாணத்துறையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

வடக்கு கிழக்கின் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் சீர்குழைக்கப்பட்டுள்ளது.


பாதுகாப்பு மற்றும் விநியோகிப்பதில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக அடிப்படை சேவைகளினதும் அத்தியாவசியப் பொருட்களினதும் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளது.

இந்த யுத்தமானது வீடுகள், வீதிகள், பாலங்கள், வர்த்தக மற்றும் அரச உடைமைகள், நீர் விநியோகத் திட்டங்கள், இயந்திரங்கள், தகவல் தொடர்புகள், பெருந்தோட்டங்கள், மற்றும் மீன்பிடித்துறை போன்ற துறைகளில் பாரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. வட கிழக்கில் சேதப்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள், வீடுகள் ஏனைய உடைமைகளை மீள் நிர்மானம் செய்வதற்கு ரூ 296,500 கோடிகள் (2001 விலை கணிப்பீட்டில்) தேவைப்படுகின்றது. வட கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் சேதமடைந்துள்ள உடைமைகளை மீள்நிர்மானம் செய்வதற்கு ரூ32,700 கோடிகள் தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.



புகைப்படம் - Lanka Monthly Digest

# யுத்தமும் பொருளாதாரம்






1 ஹெலிகப்டர் = ரூ 583,140,000 = 20 வைத்திய சாலைகள்






1 தன்னியக்க கைத்துப்பாக்கி = ரூ 10,000 = 20 மாணவர்களின் பாடசாலைப்புத்தகம்



டோரா படகு = ரூ 500,000 கோடி = ஒரு படுக்கை அறையைக் கொண்ட 8,333 வீடுகள்



**அதிகரித்த வரிகளும் பொருளாதார இழப்புக்களும்**

இந்த யுத்தத்தினால் பிரசைகளும் வியாபார நிறுவனங்களும் செலுத்தும் வரிகள் அதிகரிக்கப்பட்டது. 2001 ம் ஆண்டு வரவு செலவு அறிக்கையில் வரிகளின் பாரிய அதிகரிப்பிற்கும் தேசிய பாதுகாப்பு வரிக்கும் யுத்த செலவினமே நேரடி காரணம் என குறைகூறப்பட்டது. வரவு செலவு திட்டத்தில் மொத்த வியாபார வரிக்கு 20 வீதம் மேலதிக வரியையும் விமான நிலைய பயணிகள் வரியை இருமடங்காகவும் தைத்த ஆடைகளின் ஏற்றுமதிவரியையும் அரசு அதிகரித்துள்ளது.




யுத்தமானது பெரும்பாலான பொருட்களின் விலையை அதிகரிக்க வழிவகுத்துள்ளது. ஆயுதங்கள் மட்டுமே குறைந்த விலையில் கிடைக்கக்கூடியனவாக இருக்கின்றன.

1982 ம் ஆண்டோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது வடக்கு கிழக்கில் சராசரி குடும்பவருமானம் அரைவாசியாகக் குறைந்துள்ளது. இதுவும் இந்த யுத்தத்தின விளைவேயாகும். எரிபொருள் மருந்துவகை போன்ற அத்தியாவசிய பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவியது. உணவு, கல்வி, வைத்தியவசதி, நீர், சுகாதார வசதி போன்ற அத்தியாவசிய தேவைகள் வட கிழக்கில் வாழ்ந்த மக்களுக்குப் போதுமானளவு கிடைப்பதை அரசாங்கமோ அல்லது தமிழீழ விடுதலைப்புலிகளோ உறுதி செய்யவில்லை. சில பிரதேசங்களில் வறுமையின் காரணமாக மந்த போசனமும் சிறுவர் மரணங்களும் அதிகரித்துள்ளன.

**வெளிநாட்டு முதலீடும் உல்லாசப் பிரயாணத்துறையும்**

இந்த யுத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட பொருளாதார பாதுகாப்பின்மையும் ஸ்திரமற்ற தன்மையும் வெளிநாட்டு முதலீட்டினதும், உல்லாசப் பிரயாணத்துறையினதும் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. முதலீட்டாளர்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கையின்மையானது நாட்டின் நீண்டகால அபிவிருத்தியையும், உற்பத்தியையும் வெகுவாகப் பாதித்துள்ளது. நேரடி வெளிநாட்டு முதலீட்டின் இழப்பு அமெரிக்க டொலர் 1 61 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. உல்லாசப் பிரயாணத்துறையின் விழ்ச்சியின் காரணமாக ஏற்பட்ட இழப்பு அமெரிக்க டொலர் 44,00 கோடிகள் என கணக்கிடப்பட்டுள்ளது.

**வட கிழக்கின் உற்பத்தியின் இழப்பு**

வட கிழக்குப் பொருளாதாரமானது விவசாயத்தையும் மீன்பிடித்துறையையும் மிகக் குறைந்தளவிலாகவிருந்தாலும் முக்கியமான கைத்தொழிற் துறையையும் அடிப்படையாகக் கொண்டதாகும். எல்லாத்தொழிற்துறைகளும் சீரழிக்கப்பட்டுள்ளதோடு அதன் உற்பத்தி 40 வீதமாகக் குறைந்துள்ளது. யுத்தத்தின் காரணமாக வட கிழக்கு உற்பத்தியின்மையின் இழப்பு ரூபாய் 686,000 கோடிகள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இக்கால கட்டத்தில் தனி மனித வருமானமும் 40 வீதமாகக் குறைந்துள்ளது.

**மக்கள் வெளியேற்றத்தின் மூலம் ஏற்பட்ட பொருளாதார நட்டம்**

இந்த யுத்தத்தின் காரணமாக ஆயிரக்கணக்கானவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். வைத்தியர்கள் பொறியியளாளர்கள் போன்ற தொழில்சார் நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறாமலிருந்திருந்தால் அவர்கள் தேசிய பொருளாதாரத்திற்குப் பாரிய பங்களிப்புகளை செய்திருப்பார்கள். இவ்வகையில் மனிதவள வெளியேற்றத்தின காரணமாக ஏற்பட்ட இழப்பு யுத்தம் நடைபெற்ற ஒவ்வொரு வருடத்திற்கும் ரூபாய் 15,000 கோடி எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

*இந்த யுத்தத்தின மூலம் இலாபமடைந்தவர்கள் சிலரும் இருக்கின்றனர்*

- *இராணுவத்திற்கு பல்வேறு சேவைகளையும் பண்டங்களையும் வழங்குவதன் மூலம் பலர் அதிக இலாபம் சம்பாதித்துள்ளனர்.*
- *பாதுகாப்புத்துறையில் மேலதிக தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் பலர் தொழில்வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.*
- *தேசிய மற்றும் சர்வதேச ஆயுத விநியோகத்தர்களினால் அரசுக்கு விற்பனைசெய்யும் ஆயுதங்களின் மூலம் பாரிய வருமானம் பெறப்பட்டுள்ளது.*

வாழ்க்கைச் செலவு
தொடர்ந்தும்
அதிகரிக்கின்றன. என்னுடைய
மின்சாரக் கட்டனத்தைக்கூட
கட்ட முடியவில்லை. 2000 ம்
ஆண்டு விலைகளோடு
ஒப்பிடும் போது அரிசி சீனி
பஸ் கட்டணம் போன்றவை
30 வீதத்தால்
அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள என்னுடைய
குடும்பம் இதே போன்று
துன்புறுகின்றது. ஆனையிறவு
சண்டையின் பின்பு விலைகள்
பாரியளவு உயர்ந்தன. ரூ 9க்கு
வாங்கக்கூடிய செவ்விளநீருக்கு ரூ.
30 கொடுக்க வேண்டியேற்பட்டது.
டீசலின் விலை 86வீதமும்
மண்ணென்ணெயின் விலை 20
வீதமும் அதிகரித்தது.

வட கிழக்கில் பலர் தமிழீழ
விடுதலைப்புலிகளுக்கும்
அரசாங்கத்திற்கும் போர்வரி
செலுத்தவேண்டிய நிலைமை
இருந்தது. நாங்கள் அன்றாட
வாழ்க்கைக்கே
போராடிக்கொண்டிருக்கும் வேளையில்
அவர்களின் போருக்கு நாங்கள் வரி
செலுத்த வேண்டும் என அவர்கள்
எதிர்பார்ப்பதை என்னால்
விளங்கிக்கொள்ள முடியவில்லை.

இந்த யுத்த செலவினங்களுக்கு
உதவுவதற்காக தேசிய
பாதுகாப்பு வரி பல முறை
அதிகரிக்கப்பட்டது. என்னுடைய
பிள்ளைகளின் கல்விக்காக
பணத்தை சேமிக்க நான்
முயற்சித்தாலும் என்னால்
சேமிக்க முடியவில்லை.

**சமாதானத்தின் பொருளாதார பிரதிபலன்**

யுத்தமில்லாததொரு இலங்கையை கற்பனை செய்துபார்! இந்த நாட்டின் மனித மற்றும் இயற்கை வளங்கள் சீரழிக்கப்படாமல் இருந்திருந்தால் என்ன பலன்கள் கிடைத்திருக்கும்?

**இந்த யுத்தம் ஏற்படாமலிருந்தால்!**

- 7.8 % மாக இருக்கின்ற வேலையில்லாதோர் தொகை 3% மாகக் குறைந்திருக்கும்
- கல்விக்காக செலவுசெய்யும் பணம் மூன்றில் ஒரு பங்காக அதிகரித்திருக்கலாம்.
- சுகாதார சேவைகளுக்கான செலவை மூன்றில் ஒரு பங்காக அதிகரித்திருக்கலாம்.
- ஒவ்வொரு வருடமும் பத்து இலட்சம் உல்லாசப்பிரயாணிகள் வருகை தந்திருப்பதோடு உல்லாசப்பிரயாணத் துறையில் 141,000 தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கும். அத்தோடு, அமெரிக்க டொலர் 7,500 கோடி வெளிநாட்டு செலாவாணியாக வருடாந்தம் கிடைத்திருக்கும்
- சராசரி குடும்ப நுகர்வு வீதம் 62% ஆல் அதிகரித்திருக்கும்.
- தற்போது 5% மாகவுள்ள பொருளாதார வளர்ச்சியும் அமெரிக்க டொலர் 850 ஆகவுள்ள தனிநபர் வருமானமும் 7% வரை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டிருக்கும்.
- தேசிய கடன்களையும் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையையும் குறைப்பதற்கான மிகுதியை ஏற்படுத்தக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கும்.
- தெருக்கள் அமைத்தல், மின்சாரம் வழங்கள், தொலைத்தொடர்பு மற்றும் துறைமுக அபிவிருத்தி தொடர்பான முதலீடு 30% மாக அதிகரித்திருக்கும்
- நேரடி வெளிநாட்டு முதலீடு கணிப்பிடப்பட்ட அமெரிக்க டொலர் 161 கோடியாக அதிகரித்து பொருளாதாரம் வலுப்பெற்று தேசிய முதலீடு அதிகரிக்க வாய்ப்பிருந்திருக்கும்.

### யுத்தத்தினால் சுற்றுச் சூழலுக்கு ஏற்பட்ட தாக்கம்

சுற்றுச்சூழலையும் இயற்கை வாழ்வையும் யுத்தம் பெரிதும் பாதித்துள்ளது. வட கிழக்கில் இப்பாதிப்பு மிகவும் மோசமானதாகும். சுற்றுச்சூழல் சீரழிவின் சில முக்கிய காரணிகளும் விளைவுகளும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது.

### சுற்றுச்சூழல் சீரழிவிற்கான மூலக்காரணிகள்


- குண்டுகள், செல்வெடிகள், நிலக் கண்ணிவெடிகள், கிரனைட்டுகள், தோட்டாக்கள் போன்ற வெடி மருந்துகளினதும் வெடிகுண்டுகளினது அதிக பாவனை,
- பாதுகாப்பு அரண்கள் அமைத்தல், முகாமிடுதல், வேலிகளை அமைத்தல், பாதுகாப்பு எல்லைகளை ஏற்படுத்துதல் போன்ற நேரடி இராணுவ நடவடிக்கைகள்.
- இராணுவ கனரக வாகனங்கள் கவச வாகனங்கள் யுத்தக்கப்பல்கள் வல்லங்கள் விமானங்கள் போன்றவற்றின் நடமாட்டம். மக்கள் இருப்பிடங்களை இழந்து வெளியேறல்
- மக்கள் நடமாட்டம் தொடர்பான இராணுவ கட்டுப்பாடு மற்றும் பொருளாதாரத்தடை.



## சுற்றுச் சூழல் சீரழிவின் விளைவுகள்

- இயல்பான சுற்றுச்சூழல் தன்மையும் இயற்கைத்தாவர வகைகளும் கிணறுகள் விவசாய நிலங்கள் போன்றவை சீரழிக்கப்பட்டமை குண்டுத்தாக்குதல்களும் ஷெல்தாக்குதல்களும் உள்ளூர் மயப்படுத்தப்பட்ட ஆனால் பாரிய சேதங்களை ஏற்படுத்தின.
- வனவள அழிப்பு: சுமார் 50 இலட்சம் மரங்கள் இராணுவத்தின் வேலிகள் அமைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு இருபது அல்லது முப்பது இலட்சம் பனைமரங்கள் யாழ் குடாநாட்டில் வெட்டப்பட்டு அதன் தொகை அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளது.
- விறகாகப் பயன்படுத்தவும் எதிரணியினரின் நடமாட்டத்தைக் கண்காணிப்பதையும் நோக்கமாகக் கொண்டு கடற்கரைகளில் வளரும் கண்டல் தாவரங்களை அழித்ததனால் மீன்கள், இறால் மற்றும் பறவைகளின் வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது,
- வனவிலங்குகள் பறவைகள் மற்றும் வளர்ப்புப் பிராணிகள் அகியவற்றுக்கு அவற்றின் இயற்கையான இருப்பிடங்களை இழந்ததனால் அவை கொல்லப்பட்டதனால் அல்லது மின்சாரம் தாக்கியதால் ஏற்பட்ட பாதிப்பு
- நில், கடல் மற்றும் வளிமண்டலம் மாசடைந்தமையும் வரம்பு மீறிய சத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களும்.
- மண்வளம் பாதிக்கப்பட்டமையும், மேல்தள மண் அகற்றப்பட்டமையும், கட்டிடங்கள் இடிந்த குவியல்கள், மண்அரிப்பு மற்றும் தூசுப்படலம் அதிகரித்தல்
- சப்தம் மற்றும் அதிர்ச்சி அலைகள்
- கடற்கரைகளுக்கும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பு
- குடியிருந்த காணிகளை கைவிட்டுவிட்டு வெளியேறியதனால் விவசாயக் காணிகள் பாதிக்கப்பட்டமை செடி கொடிகளின் கட்டுப்பாடற்ற வளர்ச்சியும் இதன் மூலம் மலேரியா போன்ற நோய்களின் அதிகரிப்பும்.
- இடம் பெயர்ந்தவர்களின் காரணமாக சில பிரதேசங்களில் சனத்தொகையின் திடீர் அதிகரிப்பும் முகாம்கள் தற்காலிக குடிசைகளில் குடியேறியுள்ளவர்கள் காரணமாக இயற்கை வளங்களின் பாவனை அதிகரிப்பு மற்றும் நிலவளம் பாதிப்படைதல் காடுகள் அழிப்பு, காணி சுத்திகரிப்பு, போதிய சுகாதார வசதியின்மை மற்றும் இறந்த விலங்குகளின் உடல்களையும் கழிவுப் பொருட்களையும் முறையாக அகற்றாமையினால் நீர் மாசடைதல் அதன் காரணமாக நோய்கள் பரவல்.

(சுற்றுச்சூழல் பாதிப்பு தொடர்பான கருத்துக்கள் கலாநிதி T ஜயசிங்கம் அவர்களின் யுத்தமும் சுற்றுச்சூழலும் என்னும் கட்டுரையினதும் T. சவரிமுத்து N. சிறீஸ்கந்தராஜா V.I.S. ஜெயபாலன் ஆகியோர் எழுதிய தமிழர் தாயகத்தில் யுத்தத்தினால் இயற்கைச் சூழலின் விளைவு என்னும் கட்டுரையினதும் சாராம்சமாகும்.)



## பகுதி 2

# யுத்தத்தின் தொடரும் இழப்புக்கள் என்ன?

*போர் நிறுத்தமானது முரண்பாட்டின் காரணிகளைத் தீர்க்கவில்லை. இப்போது எமக்கு முரண்பாட்டின் விளைவுகளாக பல புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன.*

கொழும்பைச் சேர்ந்த இளம் பெண் 2002

நாங்கள் மேலே படித்ததைப்போல யுத்தமானது பல இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளது. நாங்கள் செலுத்தத் தேவையில்லாத இழப்புக்கள் என்ன? நாம் தொடர்ந்தும் செலுத்த வேண்டிய இழப்புக்கள் சிலவற்றை இந்தப் பகுதியில் ஆராய்வோம்.

பொது சன நூல
யாழ்ப்பாணம்

## வன்முறைக் கலாசாரம்

**வன்முறைக் கலாசாரமும், பயமும்**, நம்பிக்கையின்மையும் அதிகரித்த யுத்த காலத்தில் பத்து இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் தமது வாழ்விடங்களை இழந்து அகதிகளாகினர். ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். குண்டுத் தாக்குதலின் பயம் தொடர்ந்தும் நிலவியதோடு மக்கள் எவ்விதக் காரணமுமில்லாமல் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

இவ்வகையான வன்முறைக்கலாசாரத்தின் தாக்கம் இலகுவில் புலப்படாததாக இருந்தாலும் இது ஆழமாக வேரூண்றுவதனால் இந்நிலைமைகளை மாற்றுவதற்கு நீண்ட காலம் செல்லும். இத்தகைய சமூக சீரழிவை ஏற்படுத்தும் நடைமுறைகளின் தாக்கங்களாக பின்வருபவையும் உள்ளடங்குகின்றன.

- சமூகத்தில் வன்முறைகள் தான் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் என்பதை ஏற்றுக்கொள்கின்ற அல்லது அதற்குப் பழகிக் கொள்கின்ற மனப்போக்கு ஏற்படல்
- வன்முறைச் குற்றங்களும் ஊழல்களும் அதிகரித்தல்
- ஆயுதங்களை இலகுவில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புகள் ஏற்படல்
- சித்திரவதை போன்ற மனித உரிமை மீறல்கள் தோன்றுதல்.
- பொலீசார் மற்றும் சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகள் மீது நம்பிக்கையின்மை ஏற்படல் - இவர்கள் பிரசைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதைவிட அவர்களின் உரிமைகளை நசுக்குவதிலும் மீறுவதிலும்தான் கூடியளவில் செயற்படுகின்றனர் என்னும் மனப்பாங்கு ஏற்படல்.
- குடும்ப வன்செயல்கள், பாலியல் வல்லுறவுகள் மற்றும் பெண்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் எதிரான வன்செயல்கள் அதிகரித்தல்.
- அரசியல் நடைமுறைகள், வாக்களிக்கும் உரிமைகள் போன்ற துறைகளில் நம்பிக்கையையும் ஆர்வத்தையும் இழத்தல்
- தேர்தல் வன்முறைகள், அரசியல்வாதிகளைக் கொலை செய்தல், பயமுறுத்துதல், ஜனநாயக் கட்டமைப்பு மற்றும் அரசியல் வாதிகளின் செயற்பாடு பலவீனமடைதல்.
- ஒவ்வொரு சமூகத்திற்குள்ளும் சமூகங்களுக்கிடையிலும் பாதுகாப்பின்மை மற்றும் நம்பிக்கையின்மை போன்ற மனநிலைகள் ஏற்படல்.
- இன, மத, மொழி, சாதி வேறுபாடுகளைக் கொண்ட மக்களுக்கெதிராக காட்டப்படும் சகிப்புத்தன்மையின்மை மூலம் அதிகாரமின்மையையும் பயந்த மனநிலையையும் மக்கள் வெளிப்படுத்துதல்.
- சமூகம் தொடந்தும் இராணுவமயப்படுத்தப்படல்

போர் நிறுத்தத்தின் விளைவாக மக்களின் நடமாட்டத்திற்கான தடைகளில் பெரும்பாலானவை நீக்கப்பட்டுவிட்டாலும் சில பிரதேசங்களில் பலமான இராணுவ நடமாட்டமும் பிரசன்னமும் மக்களின் இயல்பான நடமாட்டங்களைக் கட்டுப்படுத்துகின்றன.

இருப்பிடங்களிலிருந்து புலம் பெயர்ந்தவர்களில் ஆயிரக்கணக்கானோர் இன்னும் அகதிகளாக தற்காலிக கூடாரங்களில் இருப்பதோடு தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாமல் இருக்கின்றனர். தமது இருப்பிடங்களுக்கு திரும்பியவர்களில் பெரும்பாலானோர் தமது உறவினர்களுடன் தொடர்புகளின்மை, சொத்துக்கள், சேமிப்புக்கள், ஜீவனோபாயம் போன்றவற்றை இழந்துள்ளமையினால் பல இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

> *நாங்கள் இன்னும் எமது மொழியை விளங்கிக்கொள்ள முடியாத அயலவர்களுடன்தான் வாழ்கின்றோம். அவர்களின் மொழியையும் எம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. எமது உறவினர்களை இலகுவில் தொடர்புகொள்ள முடியாது. எமது உறவினர்களின் திருமணங்கள் அல்லது மரணங்கள் தொடர்பான தகவல்கள் கூட பல மாதங்கள் பிந்தித்தான் கிடைக்கின்றன.*
>
> ஒரு புலம் பெயர்ந்த முஸ்லிம் - புத்தளம் 2002

நிலக்கண்ணிவெடிகள் தொடர்ந்தும் நிரந்தர அங்கவீனத்திற்கும் மரணங்களுக்கும் வழிவகுக்கின்றன. ஒவ்வொரு வருடமும் நிலக்கண்ணி வெடிகளிலால் பாதிப்புறும் பல நூற்றுக்கணக்கானவர்களின் தகவல்கள் பெறப்படுகின்றன. நிலக்கண்ணிவெடிகளை அகற்றுவது மிகவும் செலவானதும் அபாயமானதுமான செயலாகும். செழிப்பான விவசாய நிலங்களைக் கொண்ட பாரிய பிரதேசங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளன. சாவகச்சேரியும் அதன் சுற்றுப்பிரதேசங்களிலும் மட்டும் நிலக்கண்ணிகளை அகற்றுவதற்கு 300 கோடி ரூபாய்கள் தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார வளங்கள் தொடர்ந்தும் யுத்த தேவைகளுக்கு செலவு செய்யப்படுகின்றன. கட்டிடங்கள் அடித்தள வசதிகளைப் பழுதுபார்த்தல் காயமுற்றவர்களுக்கு வைத்திய பராமரிப்பு புலம் பெயர்ந்தவர்களின் அடிப்படைத் தேவைகளை வழங்குதல் போன்ற பல விடயங்களுக்கும் செலவு செய்ய வேண்டியுள்ளது. பாடசாலைகள் வைத்தியசாலைகள் போக்குவரத்து வசதிகள் போன்ற அத்தியாவசிய சேவைகளுக்குப் பதிலாக இராணுவப்பராமரிப்புக்கு தொடர்ந்தும் பாரியளவில் நிதி செலவிடப்படுகின்றது.

யுத்தம் மீண்டும் வந்துவிடும் என்ற அச்சத்துடனும் சந்தேகத்துடனும் பலர் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.



# பகுதி 3

## யுத்தம் ஏற்படுத்திய மரபுகளை எதிர்நோக்கல்

சமாதானம் என்பது வெறுமனே யுத்தமற்ற நிலைமையல்ல. அது வன்முறைகள் எப்போதும் தலைதூக்காத ஒரு சமூகம் என்பதோடு எதிர்கால முரண்பாடுகளுக்கான மூலக்காரணிகளை இல்லாமற்செய்த சமூகமாகும். நிரந்தர சமாதானத்தை அனுபவிக்கும் ஒரு சமூகத்தின் குணாம்சங்களில் பின்வருபவையும் அடங்கும்.

- ஒரு துடிப்புள்ள சிவில் சமூகம்
- எல்லாத் தரப்பினரையும் உள்வாங்கிய ஜனநாயக அரசியல் கட்டமைப்பும் நடைமுறைகளும்.
- பகிரங்கமானதும் பொறுப்பேற்கக்கூடியதுமான அரசாங்கம்
- எல்லா சிறுபான்மை இனக் குழுமங்களுக்கும் மற்றும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் பாதுகாப்பும் சமத்துவவும் கொண்ட சமூகம்
- எல்லோருக்கும் பூரணமான சமூக பொருளாதார சிவில் மற்றும் அரசியல் மனித உரிமைகளுக்கான உத்தரவாதம்.

இலங்கையில் வன்முறைக்கலாசாரத்தை இல்லாதொழித்து சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு மீள் இணக்கப்பாட்டையும் புனர்வாழ்வையும் பூர்த்திசெய்வது ஓர் நீண்ட கால செயற்பாடாகும். இதற்கு பாரியளவில் மனித, தொழில்நுட்ப, மற்றும் நிதி வளங்களும் அரசியல் மற்றும் மக்களின் கடமைப்பாடும் அவசியமாகும். தற்போதைய சமாதான நடைமுறை சாதகமானதொன்றாக அமைய வேண்டுமேயானால் அது சகல தரப்பினரையும் உள்வாங்கியதாகவும் நீதி, சமத்துவம் மற்றும் பொறுப்புக்கூறல் போன்ற கொள்கைகளின் அடிப்படையைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

பயத்தை இல்லாதொழிப்பதோடு யுத்தத்தின் விளைவுகளையும் யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள மனவேதனைகளையும் எதிர் கொள்வது எப்படி? எதிர்காலத்தில் வன்முறை தொடர்பான சவால்களை நீக்குவது எப்படி? போன்ற விடயங்கள் தொடர்பாக உங்களுடைய குடும்பத்தில், சமூகத்தில், கிராமத்தில் அல்லது நகரத்தில் மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள் என்ன என சற்று சிந்தியுங்கள்.

**சில முன்னுரிமை பெறும் நடவடிக்கைகளாவன**

- இந்த யுத்தத்தினால் காணமற்போனவர்களின், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அவ்வகையான தீங்கை விளைவித்தவர்கள் அவை தொர்பான எல்லாதகவல்களையும் வழங்குவதன் மூலம் அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதை உறுதிசெய்தல் வேண்டும். ஏனெனில் அவர்கள் உண்மையை தெரிந்துகொள்ளாதவரை பாதிப்பிற்குள்ளானவர்களின் மனதை சாந்தப்படுத்துவதோ அல்லது கடந்த கால தீங்கை மன்னித்துவிடுவதோ இயலாதகாரியமாகும்.
- வன்முறைகளைக் கொண்ட அரசியற் கலாசாரம், தொடர்பாடலையும், பங்குபற்றுதலையும் கொண்ட அரசியற் கலாசாரமாக மாற்றப்படல் வேண்டும். அரசியல் தளத்தில் பகிரங்கத்தன்மையையும், கட்டமைப்பு ரீதியான சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் அடைவதை இலக்காகக் கொண்டு மனித உரிமை பாதுகாப்பிற்கும் அரச நிறுவனங்களின் மறு சீரமைப்பிற்கும் தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். தேர்தல் தொடர்பான வன்முறைகளற்ற வகையில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல்கள் நடைபெறுவதும் முக்கியத்தேவையாகும்.
- தமது வழமையான வதிவிடங்களுக்குத் திரும்பும் புலம்பெயர்ந்தவர்களுக்குத் தேவையான நிதி மற்றும் தொழில் நுட்ப வளங்களையும் ஒத்துழைப்பு மற்றும் பாதுகாப்பையும் உத்தரவாதப்படுத்துதல் வேண்டும்.
- சமாதான நடைமுறையின் சார்பான மக்களின் அபிப்பிராயமும் எதிர்பார்ப்பும் அதிகரித்து வருகின்ற வேளையில் இலங்கையின் சனத்தொகையின் மிகப் பெரும்பான்மையினர் இந்த சமாதான நடைமுறையில் பங்கு பற்றவோ அல்லது இந்நடைமுறையின் உரிமையாளர்களாக மாறவோ முடியாமல் இருக்கின்றனர். சமாதான நடைமுறையையும் அதன் முக்கியத்துவத்தையும் பொதுமக்கள் நன்கு புரிந்துகொள்ளல் வேண்டும். மக்கள் மத்தியில் நிலவும் நியாயமான பயத்தைப் போக்குவதை இலக்காகக் கொண்டு உடன்பாடு காணப்பட்ட விடயங்கள் என்ன, ஏன், எப்போது, எவரால் போன்ற விடயங்கள் தொடர்பான தகவல்கள் அவ்வப்போது தாமதமின்றி மக்களை சென்றடைதல் வேண்டும்.

- முன்னைநாள் போராளிகளின் புனர்வாழ்விற்குத் தேவையான ஆதரவையும் வளங்களையும் வழங்குதல் வேண்டும். இதின் ஆண், பெண் போராளிகளின் தேவைகள் மாறுபட்டதாக இருக்கும் என்பதை ஏற்று செயல்படல் வேண்டும்.
- சமாதான, சிவில்சமூக, சனசமூக அமைப்புகள் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் அவர்களது பணிகளுக்குத் தேவையான வளங்கள் வழங்கப்படல் வேண்டும்.
- அரசாங்க வரவு செலவுத்திட்டத்தில் இராணுவ செலவுகளுக்கு ஒதுக்கும் நிதி புனர்நிர்மான புனர்வாழ்வுப்பணிகளுக்கு மாற்றப்படல் வேண்டும்.
- சிறு ஆயுதங்களை சேகரிப்பதற்கும் அவற்றை அழிப்பதற்கும் தேவையான வலுவான செயற்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
- சர்வதேச உதவிகள் மிகவும் தேவையானவர்களுக்கு சென்றடைவதை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் கண்காணிக்கப்படல் வேண்டும்.

## இவரை எப்பொழுமே சிரித்துக் கொண்டிருக்க வைப்பது எப்படி?



**யுத்தக் குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பான உண்மைகளும் மீள் இணக்கப்பாடும்.**

*வன்முறை முரண்பாட்டில் கொடூரமான சம்பவங்களுக்குப் பலியான தனிநபர்களோ அல்லது குழுக்களோ அத்தகைய கொடூரங்களை ஏற்படுத்தியவர்கள் முன்வந்து அதற்கானப் பொறுப்புக்களை பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளாமல் இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக நீதியை நிலைநாட்டாமல் வெறுமனே அவற்றை மன்னித்துவிடுவார்கள் எனக்கருதுவது எதிர்கால முரண்பாடுகளுக்கு வித்திடும் செயலாகும்.*

கிரிட்ஸ - 1996

பலவருடங்களாக நீடித்த வன்முறை முரண்பாட்டின் விளைவாக முரண்பாட்டின் எல்லாத்தரப்பினருக்கும் அடுக்கடுக்காக ஏற்பட்ட மன வேதனைகளுக்கும் விபரீதங்களுக்கும் நிவாரணமளிக்கும் விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமே எதிர்கால முரண்பாடுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியும். கடந்த கால விபரீதங்கள் காரணமாக மன வேதனைக்கும் கவலைக்கும் உள்ளாகியுள்ள ஆயிரக்கணக்கானவர்கள் அவர்களுக்கு ஏற்பட்ட விபரீதங்கள் தொடர்பாக அரசாங்கத்தின் அங்கீகாரமோ அல்லது உத்தியோகபூர்வமான ஏற்றுக்கொள்ளலோ அல்லது அவ் விபரீதங்களை விளைவித்தவர்கள் அச்சம்பவங்கள் தொடர்பான தகவல்களை பகிரங்கமாக வெளியிடாமலோ வெறுமனே அவர்கள் கடந்தகால விபரீதங்களை மன்னிப்பது கடினமான விடயமாகும்.

பாரிய மனித உரிமைமீறல்கள், யுத்தக் குற்றங்கள் புரிந்தவர்கள் தொடர்பாக எவ்வித நிபந்தனைகளுமின்றி மன்னிப்பு வழங்குவது அத்தகைய வன்முறைக் குற்றங்களைப் புரிந்த நிறுவகங்களில் எவ்வித மாற்றமுமின்றி வன்முறைக்கலாச்சாரமும் மேலும் வேரூன்றும் விளைவையே ஏற்படுத்தும்.

*நாங்கள் பொறுப்பேற்றல், மன்னித்தல் போன்ற சொற்களைப் பேசுகின்றோம். ஆனால் நடந்த சம்பவங்களைப் பகிரங்கப்படுத்தும் தேவையிருக்கின்றது. ஏன் இத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்தன. எப்படி நிகழ்ந்தன போன்ற விடயங்களை விளக்கிக் கூறிய பின்பே மன்னிப்பைக் கேட்க வேண்டும். அவர்கள் இவற்றை விளக்காமல் நாம் எப்படி முன்னோக்கி நகர்வது. மக்களின் கடந்த கால நினைவுகளிலிருந்து விடுபடுவதற்கு உண்மை நிலை நாட்டப்படல் வேண்டும்.*

கிளிநொச்சியை சார்ந்த ஒரு பெண் 2003

உண்மையையும் நீதியையும் நிலைநாட்டும் நடவடிக்கைகள் எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும், எவ்வகையான விடயங்கள் அனுகப்படல்வேண்டும். எவை மன்னிக்கப்படல் வேண்டும் போன்ற காரணிகள் இலங்கை முழுவதும் கிராம மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை ஆழமாகக் கலந்துரையாடப்படல் வேண்டும்.

யுத்தக்குற்றங்கள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வது கடந்தகால சம்பவங்கள் தொடாபான தேசிய பொறுப்பேற்றலையும் அதன் கடந்த கால யதார்த்தங்கள் தொடர்பான ஞாபகங்களை நிலைநாட்டவும் எல்லா சமூகங்களினதும் ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து கௌரவிக்கக்கூடிய வகையில் யுத்தகால குற்றங்கள் தொடர்பான தேசிய பொறுப்பேற்றலையும் கடந்தகால யதார்த்தங்கள் தொடாபான ஞாபகங்களை நிலைநாட்டக்கூடிய வகையிலுமான வலுவான நடவடிக்கைகள் மூலம் யுத்தக்குற்றங்கள் தொடர்பாக நடைமுறைகள் மேற்கொள்ளல் வேண்டும். இவ்வடிப்படையில் கடந்த காலம் தொடர்பான நிலைமைகளை சீர்செய்வது எதிர்காலத்தில் எல்லோரினதும் சமத்துவத்தை நிலைநாட்டுவதற்குத் தேவையான நிறுவகரீதியான சீர்திருத்தங்களை மேற்கொள்ள உகந்த வாய்ப்பை ஏற்படுத்தும்.

எமது பெயரிலேயே இந்த யுத்தம் நடந்துள்ளது. இந்த யுத்ததிதினால் இன்னும் நட்டப்படுவது நாங்களே. எனவே நாம் ஒவ்வோருவரும் உறுதியாக எழுந்து நின்று ஒரே குரலில் கூறவேண்டிய ஒரே விடயம்

## யுத்தத்தை நிறுத்து!

எமக்குத் தேவையானது யுத்தமல்ல. எல்லோருக்கும் நிரந்தரமான சமாதானத்தையும் நீதியையுமே நாம் கோருகின்றோம். அதற்காக உங்களால் மேற்கொள்ளவேண்டிய பணிகள் என்ன? ஆரம்ப நடவடிக்கைகள் சில பின்வருமாறு.

- இச்சிறு நூலை உங்களது நண்பர்கள் குடும்பத்தினர் அயலவர்கள் சகாக்கள் எல்லோருக்கும் காட்டுங்கள்.
- உங்களது பிரதேசத்தில் செயற்படும் சமாதான செயற்பாடுகளில் அல்லது வலையமைப்புகளில் சேர்ந்து செயற்பட்டு வலுப்படுத்துங்கள்.
- உங்களது பிரதேசத்தில் சமாதானத்தை கட்டியெழுப்ப என்ன செய்தல வேண்டும் என்பதை கலந்துரையாட ஒரு சமாதானக் குழுவையோ அல்லது ஒரு கல்விவட்டத்தையோ ஆரம்பியுங்கள்.
- சமாதானம் தொடர்பான உங்களது அபிப்பிராயங்களையும் அவதானங்களையும் உங்களது பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி, பிரதம அமைச்சர் போன்றவர்களுக்கு எழுதியனுப்புங்கள்.
- இராணுவத்திற்கும் யுத்தத்திற்கும் செலவு செய்யும் பணத்தை கல்வி சுகாதார சேவை, யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ்வு மற்றும் வறுமையொழிப்பு நடவடிக்கைகளுக்கு செலவு செய்வதற்கு கடமைப்படும் படி உங்களது அரசியல் பிரதிநிதிகள் தேர்தல் அபேட்சகர்கள் போன்றவர்களை வலியுறுத்துங்கள்.
- சமாதானம் தொடர்பான கூட்டங்கள், கலந்துரையாடல்கள், செயலமர்வுகள் போன்றவற்றில் பங்குபற்றுங்கள்.
- யுத்தத்தில் பலியான அப்பாவி மக்களுக்காகவும், சமாதானத்தை வேண்டியும் உங்களது பிரதேச மத வழிபாட்டுத்தளங்களில் விசேட ஆராதனைகளையும் பூசைகளையும் நடத்தும்படி ஆர்வப்படுத்துங்கள்.
- நிலையான சமாதானத்தை ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை ஆதரிப்பதற்கும் ஆர்வப்படுத்துவதற்கும் ஏதுவான வகையில் சமாதானமான ஆர்ப்பாட்டங்களையும், சமாதானப் பேரணிகளையும் ஏற்பாடுசெய்து கலந்துகொள்ளுங்கள்.
- சமாதானத்தின் தேவை தொடர்பான உங்களது அபிப்பிராயத்தை தெரிவிக்கவும் சமாதானத்திற்கெதிரான பிரச்சாரங்கள் தவறான தகவல் போன்றவற்றுக்கு சவால் விடவும், சரிசெய்யவும் எழுத்துமூலமாகவோ தொலைபேசி மின்னஞ்சல் மூலமாகவோ உங்களது செய்திப்பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, ஆகியவற்றுக்கு அறிவியுங்கள்.
- சமாதானத்தைக் கட்டியெழுப்புவதை கருப்பொருளாகக் கொண்டு ஓவியம் வரைதல், கவிதை, நாடகம், கட்டுரை போன்ற போட்டிகளையோ அல்லது வீதி நாடகம், கலைவிழாக்கள், புகைப்பட சித்திரக் கண்காட்சிகளை ஏற்பாடுசெய்து அவற்றில் பங்குபற்ற உங்கள் பிரதேச அரசியல்வாதிகளையும் அழையுங்கள்.

*(அரசின் சமாதான நடைமுறை தொடர்பான தகவல்களை அல்லது போர் நிறுத்த உடன்படிக்கையின் பிரதியைப் பெற்றுக்கொள்ள அரச சமாதான செயலக இணையத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். www.peaceinsrilanka.org)*

**இலங்கை தேசிய சமாதான பேரவை**

12/14, புராண விகார வீதி கொழும்பு - 06 இலங்கை

தொலைபேசி (94-1) 2818344 , 2854127 தொலைமடல் (94-1) 2819064

மின்னஞ்சல் peace2@sri.lanka.net

இணையத்தளம் www.peace-srilanka.org


Printed by Sarvodaya Vishva Lekha - Sri Lanka